# அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் - ஜூன் 2017
## தமிழ் இரண்டாம் தாள்
**(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)**

**நேரம் : 2.30 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

| | | | |
|---|---|---|---|
| **அறிவுரை** | : | 1. | அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். |
| | | 2. | நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். |
| **குறிப்பு** | : | 1. | இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது. |
| | | 2. | விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும். |
| | | 3. | வினா எண் **38** - க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும். |

**பிரிவு – I (மதிப்பெண்கள்: 20)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**பகுதி-1**

**உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. இடையில் ஐகாரம் குறைந்து வந்த சொல் .............
   அ) திண்ணை ஆ) வளையல் இ) ஐந்து
2. அவன் சித்திரையான் என்பது ..........ஐ அடிப்படையாகக் கொண்ட குறிப்பு வினைமுற்று.
   அ) இடம் ஆ) காலம் இ) தொழில்
3. மகிழ்ச்சியின் அடிப்படையில் அமைந்த அடுக்குத் தொடர்:
   அ) வருக வருக ஆ) தீ தீ தீ இ) பாம்பு பாம்பு
4. ஆநிரைகளை மீட்டல் .......... திணை
   அ) வெட்சி ஆ) காஞ்சி இ) கரந்தை
5. ‘அரிது’ என்னும் ஈற்றசைக்குரிய வாய்ப்பாடு
   அ) காசு ஆ) பிறப்பு இ) மலர்

**பகுதி-2**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 x 1 = 5**

6. ‘தாயொப்பப் பேசும் மகள்’ இதில் இடம் பெற்றுள்ள உவம உருபு ...............
7. ‘மாணவர்களே, உங்களுக்குச் சீருடை இல்லையோ?’ என வினவுவது ............
8. குழிந்தாழ்ந்த கண்கள் என்பது ........... க்குச் சான்று
9. மாலை என்பது ............ திணைக்குரிய சிறு பொழுது
10. இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர் ......................

**பகுதி-3**

**சுருக்கமாக விடையளி.** **10 x 1 = 10**

11. வினைத்தொகையில் வல்லினம் மிகாது. சான்று தருக.
12. கிளி கல்லால் அடிப்பட்டது. **(பெயரெச்சமாக மாற்றுக)**
13. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
    **மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றது.**
14. கீழ்க்காணும் தொடரில் உள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.
    **திரைப்படம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி போட வல்லது**
15. இருபொருள் தருக. – **திங்கள்**

16. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.

**கதைப் படங்கள் மட்டுமின்றி கருத்துப் படங்கள் செய்திப் படங்கள் விளக்கப் படங்கள் கல்விப் படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.**

17. பிற மொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

**ஹோட்டலுக்குச் சென்று நாஷ்டா சாப்பிட்டான்.**

18. தொகைச் சொல்லை விரித்தெழுதுக. **ஐம்பொறி**

19. இளமைப் பெயர்களைப் பொருத்துக.

**கீரி – குஞ்சு**
**கோழி – கன்று**
**– பிள்ளை**

20. மரபுத் தொடரை வாக்கியத்தில் அமைத்தெழுதுக.

முதலைக் கண்ணீர்

## பிரிவு – II (மதிப்பெண்கள்:10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5 x 2 = 10**

21. ஆய்தக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
22. எச்சம் என்றால் என்ன? அவை எத்தனை வகைப்படும்?
23. இனமொழி விடையைச் சான்றுடன் விளக்குக.
24. நிலங்கடந்தான் - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
25. வயலும் வயல் சார்ந்த இடமும் எத்திணைக்குரியது?
26. பாடாண் திணையை விளக்குக.
27. அடுக்குத் தொடருக்கும், இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

## பிரிவு – III (மதிப்பெண்கள் : 50)

### பகுதி-1

| |
|---|
| குறிப்பு : பகுதி 3-ல் வினாஎண் 35-ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது. |

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்கு விடையளிக்க. 2x 5 = 10**

28. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?
29. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
    சால மிகுத்துப் பெயின்'
    - இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.**(அல்லது)**
    சொல் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.
30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.
    பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
    நல்லார் தொடர்கை விடல்.

### பகுதி-2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க. 2x 5 = 10**

31. அகழாய்வு குறித்த செய்தியைத் தொகுத்தெழுதுக.
32. எம்.ஜி. இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை வரைக.
33. இலிண்ட்கிரென் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

பகுதி-3

**34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5**

(அ) மாலதி ஸ்கூல் லைப்ரரிக்குச் சென்றாள். அங்குள்ள லைப்ரரியனிடம் 'இங்கிலிஷ் டிக்ஷனரி, அட்லஸ், ஸ்டோரி புக்ஸ் எல்லாம் எந்த ராக்கில் இருக்கிறது' என வினவினாள்.

(ஆ) கீழுள்ள தொடர்களில் உள்ள கோடிட்ட இடத்தை உரிய தமிழெண்களால் நிரப்புக.

(அ) என் தந்தையின் வயது ……….(49)

(ஆ) பெண்ணின் திருமண வயது ……… (21)

(இ) அவசர போலிஸ் உதவிக்கு …….

(ஈ) தமிழ் பாடத்தில் அரையாண்டுத் தேர்வில் பெற்ற மதிப்பெண் …………

(75 லிருந்து 80க்குள் ஏதேனும் ஒரு எண்)

**35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5**

**அ)** Maps serve better than the printed pages for giving many kinds of information. Infact, people made and used maps before they learned how to read and write. Explorers have found maps that had been made by their ancestors. Sometimes these maps were carved on stones.

**ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

1. Too much of anything is good for nothing
2. Charity begins at home
3. Union is strength
4. Failure is the steping stone to success

**35. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x 1 = 5**

இந்தியாவின் மிக உயர்ந்த பதவியில் இருந்த அவர், நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் முதல் இருபது மணி நேரம் வரை கடுமையாக உழைப்பார். சில நாள் வீடு திரும்ப நள்ளிரவுக்கு மேல் ஆகிவிடும்.

ஒரு நாள் அவர், நள்ளிரவுக்கு மேல் வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் வீடு திரும்பினார். நெடுங்காலமாக அவரிடம் வேலை பார்த்து வரும் காவலர், அன்று களைப்பு மிகுதியால் உறங்கிக் கொண்டிருந்தார்.

அவருடன் வந்த மற்றவர்கள், அந்தக் காவலரை எழுப்பச் சென்றார்கள். அவர்களைத் தடுத்தி நிறுத்தி, 'பாவம் வயதானவர், அவரை எழுப்பாதீர்கள், அவர் தூங்கட்டும்' என்று கூறியவாறே தாமே அறையின் திறவுகோலை எடுத்துச் சென்று அறையைத் திறந்தார்.

அவரோடு வந்த வெளிநாட்டு நண்பர் தமது கட்டுரை ஒன்றில், அவரின் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டாய் இந்நிகழ்வைக் குறிப்பிடுகிறார்.

அவர்தாம் இந்தியாவின் முதன்மையமைச்சராக இருந்த நேரு.

**i) இந்தியாவின் உயர்ந்த பதவி எது?**

**ii) நாளொன்றுக்கு எத்தனை மணி நேரம் உழைப்பார்?**

**iii) காவலர் என்ன செய்து கொண்டிருந்தார்?**

**iv) நேரு என்ன செய்தார்?**

**v) மனித நேயத்திற்கு எடுத்துக்காட்டு……………**

பகுதி-4

**36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x 5 = 5**

**(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.**

இரவு நேரம், எங்கும் கும்மிருட்டு. மனிதர்களின் நடமாட்டம் எல்லாம் அடங்கி அமைதி நிலவும் வேளை, ராமு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது…..

**(அல்லது)**

**(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.**

'அந்தி வானம்' அல்லது 'குழந்தை'

**பகுதி-5**

**37. கீழ்க்காணும் பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக் கருத்தினை எழுதுக, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக. 1x 5 = 5**

நிலவளம் நீர்வளம் நிறைந்ததுன் நாடு
நீண்டஉன் பரப்பிலும் வேறில்லை ஈடு
விலையிலும் விளைவிலும் மலிந்ததுன் தேசம்
வேண்டிய யாவும் உன் எல்லையில் வாசம்
பாஷைகள் பற்பல படித்தவள் நீயே
படித்ததன் பயன்பெறும் நடத்தையுள் ளாயே
ஆசைகள் அகற்றிய அறங்களில் சிறந்தாய்
அன்பின் வழிகளை அனைத்தையும் அறிந்தாய்

- நாமக்கல் கவிஞர்.

**பகுதி-6**

**38.** மோகன் (47 வயது) தன் மனைவி மஞ்சுளாவுடன் (42 வயது) 28.6.2017 அன்று திருச்சியிலிருந்து மதுரைக்குத் தொடர் வண்டியில் செல்லத் திட்டமிட்டு இருக்கை முன்பதிவு செய்ய முன்பதிவு மையம் செல்கிறார். உங்களை மோகனாகப் பாவித்து விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க. **1x 5 = 5**

**பகுதி-7**

**39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. 3+2=5**

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்பவர்கள் யார்? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள்தாம். மாற்றுத் திறனாளியிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம். அருஞ்சாதனை புரிந்த தாமசு ஆல்வா எடிசன், கெலன் கெல்லர், பீத்தோவன், மைக்கேல் பாரடே, சான்சன் முதலானோர் மாற்றுத் திறனாளியரே.

தன்னம்பிக்கை ஒன்றையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள். வெற்றியும் கண்டார்கள்.

நான்கு வயதில் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சலினால், இனி நடக்கவே முடியாது என மருத்துவரால் கூறப்பட்ட வில்மா ருடால்ப் என்னும் பெண்மணி, தன்னம்பிக்கையையும் விட முயற்சியையும் கைவிடவில்லை. இடைவிடாத பயிற்சியும் துணிவும் கொண்டு விளங்கிய வில்மா, பதின்மூன்று வயதில் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண்டாள். 1960 – ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கங்களை வென்ற பெண்மணி எனப் பாராட்டப் பெற்றார்.

நம்பிக்கைதான் வாழ்வின் உயிர்நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக் கூட மாற்றிச் சாதனை படைக்கலாம் என்பதற்கு இவர்கள் வாழ்க்கை மிகச் சிறந்த சான்று.

i) தாமசு ஆல்வா எடிசன் முதலானோர் வெற்றி பெறக் காரணம் என்ன?
ii) வில்மா ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்லக் காரணம் யாது?
iii) வில்மாவைப் போன்று நீ இருந்தால் என்ன செய்திருப்பாய்?

**(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.**

மதியழகன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும் போது தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும், தந்தை அவன் மீது சினம் கொள்கிறார். ஏனெனில், அவன் மிகச்சிறந்த பொறியாளராக வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம். மதியழகன் தன் தந்தையிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது என்று தெரியாமல் தடுமாறுகிறான்.

i) மதியழகன் தன் விருப்பப்படி படிக்க வேண்டுமா? அல்லது பெற்றோர் விருப்பப்படி படிக்க வேண்டுமா?
ii) மதியழகன் தன் விருப்பத்தை நிறைவேற்றத் தன் பெற்றோரை எவ்வாறு சம்மதிக்க வைப்பான்?

**பிரிவு – IV (மதிப்பெண் : 20)**

**பகுதி-1**

**40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடையளிக்க. 1x 10 = 10**

(அ) பழுதடைந்த சாலையைச் செப்பனிட வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

**(அல்லது)**

(ஆ) நீ கண்டு களித்த இடம் குறித்து நண்பனுக்குக் கடிதம் வரைக.

**பகுதி-2**

**41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றினுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக. 1x 10 = 10**

(அ) தமிழின் தொன்மை – தாய்மை – தனித்தன்மை – பொதுமைப்பண்பு – உயர்சிந்தனை

**(அல்லது)**

(ஆ) சாரணர் குழு – சாரணர் கடமை – சமூக சேவை – செஞ்சிலுவைச் சங்கம் - பள்ளிகளில் பயிற்சி – தேசியப்படை